**முதன்மை மாவட்ட நீதிமன்றம், கடலூர் மாவட்டம், கடலூர்.**

**முன்னிலை : திரு. S. ஜவகர், B.L.,**

**முதன்மை மாவட்ட நீதிபதி, கடலூர்.**

**2023-ஆம் ஆண்டு, ஆகஸ்ட் மாதம் 29-ஆம் நாள் செவ்வாய் கிழமை**

**E.P.No.228/2022 in A.R.No.9/2022**
**(TNCD01-007913-2022)**

ஜெயப்பிரியா சிட்பண்ட்ஸ்(பி) லிமிடெட்.,
நெய்வேலி டவுன்ஷிப்,
அதன் போர்மேன் மூலமாக

.. மனுதாரர்/தீர்ப்பாணை பெற்றவர்

/எதிராக/

1. ஆர். பாரதி
2. ஜி.மூர்த்தி .. எதிர்மனுதாரர்கள்/தீர்ப்பு கடனாளிகள்

இம்மனுவானது என் முன்பு 11.08.2023 அன்று இறுதி விசாரணைக்கு வந்தபோது, மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.க.முத்துக்குமார் அவர்களும், 2-வது எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.கே.கோடீஸ்வரன் அவர்களும் முன்னிலையாகியும், இருதரப்பு வாதுரை கேட்கப்பட்டும், இம்மனுவில் முன்னிடப்பட்ட ஆவணங்களையும் பரிசீலனை செய்தும், இதுநாள் வரையில் இந்நீதிமன்ற பரிசீலனையிலிருந்து வந்த இம்மனுவில் இன்று இந்நீதிமன்றம் பின்வருமாறு வழங்கும்

**உத்தரவு**

நிறைவேற்றுகை மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள தீர்ப்புத் தொகையான ரூ.11,86,659/-ம் மேற்சொன்ன தொகைக்கு பின்வட்டியும், கோர்ட் செலவும் 2-வது எதிர்மனுதாரரால் கிடைக்க மேற்படி 2-ஆம் எதிர்மனுதாரருக்குப் பாத்தியமான மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள

சொத்தினை ஜப்தி செய்ய, நோட்டீஸ் அனுப்பி தொகை செலுத்தாதபட்சத்தில் 2-ஆம் எதிர்மனுதாரரின் சொத்துக்களை இந்நீதிமன்றம் மூலம் ஜப்தி செய்து ஏல இஸ்தியார் வகையறாக்களை அனுப்பி ஏலம் போட்டு தொகையை வசூல் செய்து கொடுக்க உத்தரவிடக்கோரி, மனுதாரர், உரிமையியல் விசாரணை முறைச் சட்டம் கட்டளை-21, விதி-54 மற்றும் 66-ன் கீழ் இம்மனுவை தாக்கல் செய்துள்ளார்.

**மனுதாரர் தரப்பு மனுவின் சுருக்கம் பின்வருமாறு** :

2. மனுதாரர், 1, 2 எதிர்மனுதாரர்களுக்கு எதிராக, கடலூர், துணைச் சீட்டுப்பதிவாளர் நீதிமன்றத்தில், மேற்படி AR.No.9/2022-ல் 02.06.2022 அன்று எதிர்மனுதாரர்கள் சேர்ந்தோ, தனித்தோ அசல் மற்றும் வட்டி உட்பட ரூ.10,57,024/-ம், வழக்கு தாக்கலான நாளிலிருந்து தொகை திருப்பி செலுத்தப்படும் நாள் வரையுள்ள அசலுக்கு 24% வட்டி வீதத்துடனும், வழக்கு செலவுத் தொகை ரூ.53,305/-த்தையும் மனுதாரருக்கு சேர்த்து செலுத்த வேண்டும் என்றும் உத்தரவு பெற்றுள்ளார். மேற்படி தீர்ப்பாணையை எதிர்த்து எதிர்மனுதாரர்கள் எவ்வித மேல்முறையீடு எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை. தடை உத்தரவு எதுவும் பெறவில்லை. தீர்ப்பாணை பிறப்பித்த தேதி முதல் இதுநாள் வரையில் எதிர்மனுதாரர்கள் மனுதாரருக்கு தீர்ப்பாணைத் தொகையை செலுத்த முன்வரவில்லை. எதிர்மனுதாரர்கள் தீர்ப்பாணைத் தொகையை, பைசல் செய்ய முன்வராததால், மனுதாரர், 2-வது எதிர்மனுதாரருக்கு எதிராக, நிறைவேற்றுகை மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள தொகையும், மேற்படி தொகைக்கு பின்வட்டியும், கோர்ட் செலவும் 2-வது எதிர்மனுதாரரால் கிடைக்க மேற்படி 2-ஆம் எதிர்மனுதாரருக்குப் பாத்தியமான மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள சொத்தினை ஜப்தி செய்ய, நோட்டீஸ் அனுப்பி தொகை செலுத்தாதபட்சத்தில் 2-ஆம் எதிர்மனுதாரரின் சொத்துக்களை இந்நீதிமன்றம் மூலம் ஜப்தி செய்து ஏல இஸ்தியார் வகையறாக்களை அனுப்பி ஏலம் போட்டு தொகையை வசூல் செய்து கொடுக்க உத்தரவிடக்கோரி

இம்மனுவை தாக்கல் செய்து, மனுப்படி உத்தரவாக வேண்டுமாய் மனுதாரர் பிரார்த்திக்கிறார்.

3. **2-வது எதிர்மனுதாரர் தாக்கல் செய்த எதிருரையின் சுருக்கம்** :

அசையா சொத்தினை பற்றுகை செய்வதற்காக தாக்கல் செய்யப்பட்ட நிறைவேற்றுகை மனுவானது தகுதியற்றது மற்றும் தள்ளுபடிக்குரியது. அசையா சொத்தினை பற்றுகை செய்வதற்காக தாக்கல் செய்யப்பட்ட மனுவானது பொருண்மை படிக்கும், சட்டப்படிக்கும் நிலைக்கத்தக்கதல்ல. நிறைவேற்றுகை மனுவில் வட்டி அதிகப்படியாகவும் கற்பனையாகவும் கணக்கிடப்பட்டுள்ளது. மனுதாரர், இந்த எதிர்மனுதாரருக்கு அறிவிப்பு கொடுக்காமலும், இந்த எதிர்மனுதாரர் தரப்பிலிருந்து செல்லத்தக்க ஆட்சேபணையை கேட்காமலும், மேற்படி மத்தியஸ்தர் வழக்கில் ஒருதலைபட்ச தீர்ப்பாணையை பெற்றுள்ளார். நிறைவேற்றுகை மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள சொத்தானது, எதிர்மனுதாரரின் தகப்பனார் குணசேகரனின் மூதாதையர் சொத்தாகும். மேற்சொன்ன குணசேகரனுக்கு 4 மகன்கள், அவர்கள் சீனிவாசன், அசோக்குமார், மூர்த்தி மற்றும் இந்த 2-வது எதிர்மனுதாரர் ஆவர். நிறைவேற்றுகை மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள சொத்தானது, இந்த எதிர்மனுதாரர் மற்றும் மேற்சொன்ன நபர்களின் கூட்டுக்குடும்ப சொத்தாகும். நிறைவேற்றுகை மனுச் சொத்தானது இந்த எதிர்மனுதாரர் மற்றும் மேற்சொன்ன நபர்களிடையே பாகம் பிரிக்கப்படாமல் உள்ளது. நிறைவேற்றுகை மனுவில் கண்டுள்ள சொத்தில் இந்த எதிர்மனுதாரருக்கு 1/4 பாகம் மட்டுமே உரிமையுள்ளது. எனவே, நிறைவேற்றுகை மனுவில் கண்டுள்ள சொத்தில் சக பாகஸ்தர்களின் உரிமையுள்ள நிலையில், நிறைவேற்றுகை மனுவில் கண்டுள்ள சொத்து முழுவதையும் பற்றுகை செய்ய முடியாது. எனவே, மனுவினை செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்யப்பட வேண்டும்.

4. **<u>இம்மனுவில் தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சனையாதெனில்</u>** :

மனுதாரர் மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதேயாகும்.

**<u>பிரச்சனை</u>** :

5. நிறைவேற்றுகை மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள தீர்ப்புத் தொகையான ரூ.11,86,659/-ம் மேற்சொன்ன தொகைக்கு பின்வட்டியும், கோர்ட் செலவும் 2-வது எதிர்மனுதாரரால் கிடைக்க மேற்படி 2-ஆம் எதிர்மனுதாரருக்குப் பாத்தியமான மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள சொத்தினை ஜப்தி செய்ய, நோட்டீஸ் அனுப்பி தொகை செலுத்தாதபட்சத்தில் 2-ஆம் எதிர்மனுதாரரின் சொத்துக்களை இந்நீதிமன்றம் மூலம் ஜப்தி செய்து ஏல இஸ்தியார் வகையறாக்களை அனுப்பி ஏலம் போட்டு தொகையை வசூல் செய்து கொடுக்க உத்தரவிடக்கோரி, மனுதாரர், இம்மனுவை தாக்கல் செய்துள்ளார்.

6. மனுதாரர் தரப்பில், மனுதாரர், 1, 2 எதிர்மனுதாரர்களுக்கு எதிராக, கடலூர், துணைச் சீட்டுப்பதிவாளர் நீதிமன்றத்தில், மேற்படி AR.No.9/2022-ல் 02.06.2022 அன்று எதிர்மனுதாரர்கள் சேர்ந்தோ, தனித்தோ அசல் மற்றும் வட்டி உட்பட ரூ.10,57,024/-ம், வழக்கு தாக்கலான நாளிலிருந்து தொகை திருப்பி செலுத்தப்படும் நாள் வரையுள்ள அசலுக்கு 24% வட்டிவீதத்துடனும், வழக்கு செலவுத் தொகை ரூ.53,305/-த்தையும் மனுதாரருக்கு சேர்த்து செலுத்த வேண்டும் என்றும் உத்தரவு பெற்றுள்ளதாகவும். மேற்படி தீர்ப்பாணையை எதிர்த்து எதிர்மனுதாரர்கள் எவ்வித மேல்முறையீடு எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை என்றும், தடை உத்தரவு எதுவும் பெறவில்லை என்றும், தீர்ப்பாணை பிறப்பித்த தேதி முதல் இதுநாள் வரையில் எதிர்மனுதாரர்கள் மனுதாரருக்கு தீர்ப்பாணைத் தொகையை செலுத்த முன்வரவில்லை என்றும், எதிர்மனுதாரர்கள் தீர்ப்பாணைத் தொகையை, பைசல் செய்ய முன்வராததால், மனுதாரர், 2-வது எதிர்மனுதாரருக்கு எதிராக, நிறைவேற்றுகை மனுவில்

குறிப்பிடப்பட்டுள்ள தொகையும், மேற்படி தொகைக்கு பின்வட்டியும், கோர்ட் செலவும் 2-வது எதிர்மனுதாரரால் கிடைக்க மேற்படி 2-ஆம் எதிர்மனுதாரருக்குப் பாத்தியமான நிறைவேற்றுகை மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள சொத்தினை ஜப்தி செய்து தொகையை வசூல் செய்து கொடுக்க உத்தரவிட வேண்டுமாய் வாதிடப்பட்டது.

7. 2-வது எதிர்மனுதாரர் தரப்பில், நிறைவேற்றுகை மனுவில் வட்டி அதிகப்படியாகவும் கற்பனையாகவும் கணக்கிடப்பட்டுள்ளது என்றும், மனுதாரர், இந்த எதிர்மனுதாரருக்கு அறிவிப்பு கொடுக்காமலும், இந்த எதிர்மனுதாரர் தரப்பிலிருந்து செல்லத்தக்க ஆட்சேபணையை கேட்காமலும், மேற்படி மத்தியஸ்தர் வழக்கில் ஒருதலைபட்ச தீர்ப்பாணையை பெற்றுள்ளார் என்றும், நிறைவேற்றுகை மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள சொத்தானது, 2-வது எதிர்மனுதாரரின் தகப்பனார் குணசேகரனின் மூதாதையர் சொத்து என்றும், மேற்சொன்ன குணசேகரனுக்கு 4 மகன்கள் என்றும், அவர்கள் சீனிவாசன், அசோக்குமார், மூர்த்தி மற்றும் இந்த 2-வது எதிர்மனுதாரர் ஆவர் என்றும், நிறைவேற்றுகை மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள சொத்தானது, இந்த 2-வது எதிர்மனுதாரர் மற்றும் மேற்சொன்ன நபர்களின் பாகம் பிரிக்கப்படாத கூட்டுக்குடும்ப சொத்து என்றும், நிறைவேற்றுகை மனுவில் கண்டுள்ள சொத்தில் இந்த எதிர்மனுதாரருக்கு 1/4 பாகம் மட்டுமே உரிமையுள்ளது என்றும், நிறைவேற்றுகை மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள சொத்தானது பாகம் பிரிக்கப்படாத சக பாகஸ்தர்களின் பாக உரிமை உள்ள நிலையில், நிறைவேற்றுகை மனுவில் கண்டுள்ள சொத்து முழுவதையும் பற்றுகை செய்ய முடியாது என்றும், எனவே, மனுவினை செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்யப்பட வேண்டுமாய் வாதிடப்பட்டது.

8. இருதரப்பு வாதுரைகள் கேட்கப்பட்டன. மனு மற்றும் எதிருரை ஆகியவற்றின் சங்கதிகள் மற்றும் மனுவில் முன்னிடப்பட்ட ஆவணங்களைப் பரிசீலனை

செய்யப்பட்டன. இந்நிறைவேற்றுகை மனுவில் முன்னிடப்பட்ட ஆவணங்களைப் பரிசீலனை செய்கையில், 1,2 எதிர்மனுதாரர்கள், மனுதாரர் சீட்டு நிறுவனத்திடமிருந்து,சீட்டு முன் ஒப்பளிப்பாணை எண்.14/16 சீட்டு உடன்படிக்கை எண்.36/16-ல் 1-வது எதிர்மனுதாரர் ( மாதம் ரூ.25,000/- வீதம் 40 மாதங்கள்) ரூ.10,00,000/-க்கான JFTL0404 என்ற சீட்டு குருப்பில் உறுப்பினர் எண்.8-ல் சேர்ந்து 24.03.2017-ல் நடந்த 15-வது ஏலத்தில் ரூ.2,35,100/- ஏலம் கோரி பரிசுத் தொகையாக ரூ.7,64,900/-ஐ 18.05.2017 அன்று பெற்றுள்ளார் 1,2 எதிர்மனுதாரர்கள் சீட்டு நிலுவைத் தொகைக்கு பொறுப்பேற்று , 18.05.2017 அன்று ரூ.6,25,000/-க்கு புரோ நோட்டு மற்றும் சொத்தை ஜாமீனாக எழுதிக் கொடுத்துள்ளனர் என்பதும்,1-வது எதிர்மனுதாரர் பரிசு தொகை பெற்றுக் கொண்ட பின்பு 19-வது தவணை முதல் தொகை செலுத்தாததால், எதிர்மனுதாரர்கள், நிலுவைத் தொகை ரூ.5,50,000/-ம், வட்டி ரூ.5,07,024/- ஆக மொத்தம் ரூ.10,57,024/-ஐ வழக்கு தாக்கலான நாளிலிருந்து திருப்பிச் செலுத்தப்படும் நாள் வரையும் ஆண்டொன்றுக்கு 24% வட்டியுடன் மனுதாரருக்கு கொடுக்க உத்தரவிடக்கோரி, மனுதாரர் கடலூர், துணைச் சீட்டுப்பதிவாளர் நீதிமன்றத்தில் மத்தியஸ்தர் வழக்கு எண்.9/2022 என்ற வழக்கினை தாக்கல் செய்துள்ளார் என்பதும், அந்த வழக்கில், எதிர்மனுதாரர்களுக்கு அழைப்பாணை சார்வு செய்தும், எதிர்மனுதாரர்களுக்கு மேற்படி மத்தியஸ்தர் வழக்கில் ஆஜராக போதிய கால அவகாசம் அளிக்கப்பட்டும், செய்தித்தாளில் விளம்பரம் செய்தும், எதிர்மனுதாரர்கள் மத்தியஸ்தர் வழக்கில் ஆஜராகாததால், 1,2 எதிர்மனுதாரர்களைத் தோன்றாத் தரப்பினர்களாக கருதப்பட்டு, பின்னிட்டு மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட ஆவணங்களை பரிசீலனை செய்து, 02.06.2022 அன்று 1,2 எதிர்மனுதாரர்கள் சேர்ந்தோ, தனித்தோ ரூ.10,57,024/-ம், வழக்கு தாக்கலான நாளிலிருந்து தொகை திருப்பி செலுத்தப்படும் நாள் வரையுள்ள அசலுக்கு 24% வட்டி வீதம், அத்துடன் செலவுத் தொகையாக ரூ.53,305/- ம் வழங்க வேண்டும் என்று தீர்வம் பிறப்பிக்கப்பட்டுள்ளது

என்பதும், தீர்வத்தின்படி எதிர்மனுதாரர்கள் தொகை செலுத்த முன்வராததால், மனுதாரர், 2-வது எதிர்மனுதாரருக்கு எதிராக அவருக்குப் பாத்தியமான சொத்தினை ஜப்தி செய்து, ஏலம் விட்டு தொகையை வசூலிக்க இந்நிறைவேற்றுகை மனுவினை தாக்கல் செய்துள்ளார் என்பது தெரிய வருகிறது. இந்நிலையில், மனுதாரர், எதிர்மனுதாரர்களுக்கு அழைப்பாணை சார்வு செய்யாமலும், எதிர்மனுதாரர்கள் தரப்பு ஆட்சேபணையைக் கேட்காமலும், ஒருதலைபட்ச தீரப்பாணையை பெற்றுள்ளார் என்று 2-வது எதிர்மனுதாரர் தரப்பில் கூறப்படும் சங்கதியானது இந்நீதிமன்றத்தால் ஏற்றுக் கொள்ளும்படியாக அமையவில்லை. அதேபோல், 2-வது எதிர்மனுதாரர் தரப்பில், நிறைவேற்றுகை மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள சொத்தானது, 2-வது எதிர்மனுதாரரின் தகப்பனார் குணசேகரனின் மூதாதையர் சொத்து என்றும், மேற்சொன்ன குணசேகரனுக்கு 4 மகன்கள் என்றும், சீனிவாசன், அசோக்குமார், மூர்த்தி மற்றும் இந்த 2-வது எதிர்மனுதாரர் என்றும், நிறைவேற்றுகை மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள சொத்தானது, இந்த எதிர்மனுதாரர் மற்றும் மேற்சொன்ன நபர்களின் பாகம் பிரிக்கப்படாத கூட்டுக்குடும்ப சொத்து என்றும், நிறைவேற்றுகை மனுவில் கண்டுள்ள சொத்தில் இந்த எதிர்மனுதாரருக்கு 1/4 பாகம் மட்டுமே உரிமையுள்ளது என்றும், நிறைவேற்றுகை மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள சொத்தானது பாகம் பிரிக்கப்படாத சக பாகஸ்தர்களின் பாக உரிமை உள்ள நிலையில், நிறைவேற்றுகை மனுவில் கண்டுள்ள சொத்து முழுவதையும் பற்றுகை செய்ய முடியாது என்றும் ஆட்சேபணை தெரிவிக்கப்பட்டுள்ளது. மத்தியஸ்தர் வழக்கு எண்.9/2022 வழக்கின் தீர்ப்பினை பரிசீலிக்கையில், 2-வது எதிர்மனுதாரர் மேற்படி சீட்டின் எதிர்கால தவணைத் தொகையை செலுத்த தவறும்பட்சத்தில், அவருக்குச் சொந்தமான, கடலூர் பதிவு மாவட்டம், வடலூர் சார்பதிவாளர் அலுவலகம் ஆவண எண்.878/2017 கண்ட சொத்தினை அதாவது நிறைவேற்றுகை மனுவில் கண்டுள்ள சொத்தினை ஜாமீனாக எழுதிக் கொடுத்துள்ளார்

என்பதும், நிறைவேற்றுகை மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள சொத்தினை தான், மத்தியஸ்தர் வழக்கு தீர்ப்பில் சொத்து விவரத்தில் ,குறிப்பிடப்பட்டுள்ளது என்பதும் தெரிய வருகிறது. நிறைவேற்றுகை மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள சொத்தானது 2-வது எதிர்மனுதாரருக்கும் அவருடைய சகோதரர்கள் சீனிவாசன், அசோக்குமார், மூர்த்தி ஆகியோருக்கும் இடையே பாகம் பிரிக்கப்படாத கூட்டுக்குடும்ப சொத்து என்பதையும், மேற்படி சொத்தில் 2-வது எதிர்மனுதாரருக்கு 1/4 பாகத்திற்கு மட்டுமே உரிமையுள்ளது என்பதையும் நிரூபிக்கும் வகையில், 2-வது எதிர்மனுதாரர் தரப்பில் வாய்மொழி சாட்சியமோ, ஆவண சாட்சியமோ எதுவும் முன்னிடப்படவில்லை. இந்நிலையில், 2-வது எதிர்மனுதாரர் தரப்பில், நிறைவேற்றுகை மனுவில் கண்டுள்ள சொத்தானது 2-வது எதிர்மனுதாரருக்கும் அவருடைய சகோதரர்களுக்கும் இடையே பாகம் பிரிக்கப்படாத கூட்டுக்குடும்ப சொத்து என்றும், மனுச் சொத்தில் சக பாகஸ்தர்களுக்கு உரிமையுள்ள நிலையில், சொத்து முழுவதையும் பற்றுகை செய்ய முடியாது என்று கூறும் கூற்றானது இந்நீதிமன்றத்தால் ஏற்றுக் கொள்ளும்படியாக அமையவில்லை. மேலும், எதிர்மனுதாரர்கள், மேற்படி மத்தியஸ்தர் வழக்கில் பிறப்பிக்கப்பட்ட தீர்வத்தை ரத்து செய்யவோ அல்லது மேற்படி தீர்வத்தை எதிர்த்து மேல்முறையீடு தாக்கல் செய்யவோ நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை. மேலும், தீர்வத்தை எதிர்த்து தடை உத்தரவு எதுவும் பெறவில்லை. இந்நிலையில், 2-வது எதிர்மனுதாரர் தரப்பில் கூறியுள்ள சங்கதிகள் இந்நீதிமன்றத்தால் ஏற்றுக்கொள்ளக்கூடியதாக அமையவில்லை. எனவே, மேற்கண்ட மத்தியஸ்தர் வழக்கில் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பாணை தேதியிலிருந்து இதுநாள் வரையில், எதிர்மனுதாரர்கள் தரப்பில், மேற்படி தீர்ப்பாணையை ரத்து செய்ய மனுவோ அல்லது மேல்முறையீடோ தாக்கல் செய்யாத நிலையிலும், தடைஉத்தரவு எதுவும் பெறாத நிலையிலும், மேற்படி மத்தியஸ்தர் வழக்கில் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பாணையானது, இறுதியானது மற்றும்

நிறைவேற்றக்கூடியது என்றும், நிறைவேற்றகை நீதிமன்றமானது, தீர்ப்பாணையை மீறி செயல்படமுடியாது என்றும், இந்நிலையில், மனுதாரர் தீர்ப்பாணையின் பலனை பெறத்தக்கவர் என்பதால், இம்மனுவானது அனுமதிக்கத்தக்கது என்றும் தீர்மானித்து, இவ்வாறாக இம்மனுவில் பிரச்சனைக்குத் தீர்வு காணப்படுகிறது.

9. முடிவாக, இம்மனுவை அனுமதித்து, இந்நிறைவேற்றுகை மனுவில் கண்டுள்ள சொத்தினை பற்றுகை செய்யவும், பற்றுகைக்கான படி 3 தினங்களில் செலுத்த வேண்டும் என்றும் உத்தரவிடப்படுகிறது. பற்றுகை செய்ய வாய்தா 27.09.2023.

இந்த உத்தரவானது என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரிடையாக உரைக்கப்பட்டு, அவரால் நேரிடையாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டதை என்னால் பிழைத்திருத்தம் செய்யப்பட்டு, இன்று 2023-ஆம் ஆண்டு, ஆகஸ்ட் மாதம் 29-ஆம் நாள் இத்திறந்த நீதிமன்றத்தில் என்னால் அவையறிய பகரப்பட்டது.

S JAWAHAR Digitally signed by S JAWAHAR Date: 2023.08.29 18:50:54 +0530

முதன்மை மாவட்ட நீதிபதி,

கடலூர்.

**இணைப்பு** :

**மனுதாரர் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணம்** : இல்லை

**எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணம்** : இல்லை

S JAWAHAR Digitally signed by S JAWAHAR Date: 2023.08.29 18:50:59 +0530

முதன்மை மாவட்ட நீதிபதி,

கடலூர்.